# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW11

| | | | |
|---|---|---|---|
| Name | : கல்வி | Caste | : |
| W/o. | : சடையன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 30.06.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 & A2 Absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை;

நான் தற்போது ஒமலூர் தாலுகா, கருப்பூர் வெள்ளாளப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் தற்போது காடையாம்பட்டி தாலுகாவில் வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றினேன்.

22.12.2014ம் தேதி சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ராசிபுரம் தாலுகா அலுவலகத்திற்கு பணி நிமித்தம் காரணமாக ஜோதி

பேருந்தில் ஏறினேன். அந்த பேருந்து சேலத்திலிருந்து ராசிபுரம் வழியாக சேந்தமங்கலம், நாமக்கல் செல்லும் பேருந்து ஆகும்.

காலை 9.30 மணிக்கு சேலம் புதிய பேருந்து நிலையத்தில் ஜோதி பேருந்தில் ஏறி கொஞ்ச தூரம் பயணம் செய்தபிறகு சந்தியூர் பேருந்து நிறுத்தம் அருகே வேத விகாஸ் பள்ளி அருகே நாமக்கல்லிலிருந்து சேலம் நோக்கி வந்த மணல் லாரி ரோட்டிலிருந்த தடுப்பு சுவரை இடிக்கும்போது பெரிய சத்தம் கேட்டது. அப்போது நாங்கள் பேருந்திலிருந்து கத்தினோம். லாரி தடுப்பு சுவரை இடித்துவிட்டு ஜோதி பேருந்தில் நேராக வந்து இடித்துவிட்டது. பிறகு இருசக்கர வாகனத்தில் வந்தவர்களையும் இடித்துவிட்டு பள்ளத்தில் சென்று நின்றுவிட்டது. பேருந்தில் பயணம் செய்த எனக்கு இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. வலது பக்க தலையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மார்பில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மேலும் முகத்தில் கீழ்தாடையில் அடிபட்டு பேருந்தின் கண்ணாடி குத்தியதால் காயம் ஏற்பட்டது. பேருந்தில் என்னுடன் வந்த கண்ணகி என்ற நர்சுக்கும் அடிபட்டது. பேருந்திர பயணம் செய்த எனக்கு முன்னர் உட்கார்ந்திருந்த 2 பெண்கள் இறந்துவிட்டார்கள். டிவிஎஸ் இருசக்கர வாகனத்தில் வந்த குழந்தை உட்பட 3 பேர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். அடிபட்ட எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு அங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சேலம் அரசு மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரில் வந்த லாரி சாலையின் நடுவே இருந்த சென்டர் மீடியனில் மோதி பிறகு நான் பயணம் செய்த பேருந்தின்மீது மோதியதும் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரி. சென்டர் மீடியனில் மோதுவதற்கு முன்னர் என்ன நடந்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரி. எனக்கு காயம் ஏற்பட்ட உடனே என்னுடைய கால், நான் பயணம் செய்த ஜோதி பேருந்தின் இன்ஜினில் மாட்டிக்கொண்டது, பிறகு என்னை விடுவித்து பேருந்திலிருந்து கீழே இறக்கினார்கள். அதன்பிறகுதான் விபத்து பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரி.

2ம் எதிரி தர்ப்பில் 1ம் எதிரி தரப்பில் செய்யப்ட்ட குறுக்கு விசாரணை தழுவிக்கொள்ளப்பட்டது.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.